A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 89 / 2021**

திரு. RM. சொக்கலிங்கம்,
5, சம்பந்தர் தெரு,
தேவகோட்டை – 630 302.

………மேல்முறையீட்டாளர்
(திரு. RM. சொக்கலிங்கம்)

எதிர்

1. செயற்பொறியாளர்/பகிர்மானம் / காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், கலானிவாசல்,
காரைக்குடி – 630702.

2. உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம் /தேவகோட்டை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தேவகோட்டை – 630302.

3. உதவி பொறியாளர்/ நகர் / தேவகோட்டை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தேவகோட்டை – 630302.

...... எதிர்மனுதாரர்கள்
(திரு பா.ஜான்சன், செயற்பொறியாளர்/பகிர்மானம்/ காரைக்குடி
திரு. R. ஜோசப் செல்வராஜ், உதவி செயற்பொறியாளர்/
பகிர்மானம் /தேவகோட்டை
திரு. I. டைடஸ், உதவி பொறியாளர்/ நகர் / தேவகோட்டை)

**மனு பெறப்பட்ட நாள்: 07-12-2021**

**கேட்புரை நாள்: 09-02-2022**

**ஆணை நாள்: 04-03-2022**

07.12.2021 அன்று பெறப்பட்ட திரு. RM. சொக்கலிங்கம், 5, சம்பந்தர் தெரு, தேவகோட்டை – 630 302 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 89/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 09.02.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது வீட்டு காம்பவுண்ட் சுவர் அருகில் அமைந்துள்ள மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றித் தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது வீட்டு காம்பவுண்ட் சுவர் அருகில் அமைந்துள்ள மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றித் தருமாறு எதிர்மனுதாரர் உதவி செயற்பொறியாளர்/தேவகோட்டை/நகர் அவர்களிடம் புகார் அளிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 இது குறித்து எந்த நடவடிக்கையும் இல்லாததால் மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்மன்றம், சிவகங்கை மின் பகிர்மான வட்டத்தில் இணையதள வாயிலாக 26.06.2020 அன்று மனு பதிவு செய்துள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சிவகங்கை மின்பகிர்மான வட்டம் 18.09.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு:**

சிவகங்கை மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.09.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"<u>**மன்றத்தின் தீர்வு**</u>:

*மேற்கண்டவற்றிலிருந்து மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரர்களின் வாதுரையின்படி தற்போதைய நிலையில் மின்மாற்றி மனுதாரரின் இடத்தின் அருகில் உள்ளது என்ற மனுதாரர் வாக்கு மூலத்தையும், எதிர்மனுதாரர்களின் வாதுரையும் கொண்டு இந்த மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் கீழ்கண்டவாறு முடிவை இறுதி செய்கிறது.*

*எதிர்மனுதாரர்கள் மனுதாரரால் குறிப்பிட்ட இடத்தினை கூட்டாக கள ஆய்வு செய்து மேற்படி தற்போதைய நிலவரம் அறிந்து மின்மாற்றியினை இடமாற்றம் செய்வது குறித்து ஆராய்ந்து மனுதாரரின் கோரிக்கையை தமிழ்நாடு மின்சார பகிர்மான விதி தொகுப்பு ஒழுங்குமுறை விதிகள் பகுதி 37 மற்றும் அத்தியாயம் 5 விதி (16) சரிசெய்து தரும்படி இந்த மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் உத்தரவிடுகிறது.*

*மேற்கண்ட முடிவுடன் இம்மன்றம் மனு எண் 06/2020 இறுதி செய்கிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 09.02.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. RM. சொக்கலிங்கம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு பா.ஜான்சன், செயற்பொறியாளர்/பகிர்மானம்/ காரைக்குடி, திரு. R. ஜோசப் செல்வராஜ், உதவி செயற்பொறியாளர்/பகிர்மானம் /தேவகோட்டை மற்றும் திரு. I. டைடஸ், உதவி பொறியாளர்/ நகர் / தேவகோட்டை, சிவகங்கை மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள்

சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளரின் வீட்டு காம்பவுண்டு சுவருக்கருகில் சுமார் ஒரு அடி தூரத்தில் மின்மாற்றி வைக்கப்பட்டுள்ளதாகவும், மின்மாற்றி வைத்த சில நாட்களிலேயே மின்மாற்றியிலிருந்து ஆயில் காம்பவுண்டு சுவரில் பீச்சி அடித்ததாகவும், தகவல் தெரிவித்த பின் எதிர்மனுதாரர் சரிசெய்ததாகவும், மழைக்காலங்களில் தீப்பொறி வந்ததாகவும், மேலும் ஒரு முறை கேபிளில் தீப்பொறி வந்து தகவல் தெரிவித்தபின் சரிசெய்யப்பட்டதாகவும், 28.05.2020 அன்று மாலை காற்று, இடி, மின்னலுடன் மழை பெய்தபோது மின்மாற்றியிலிருந்து தீப்பொறி தனது காம்பவுண்டில் உள்புறம் விழுந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இதுபோன்று அடிக்கடி நிகழ்வதால் வீட்டு காம்பவுண்டு சுவர் அருகே அமைக்கப்பெற்றுள்ள மின்மாற்றியை இடம் மாற்றி அமைத்து வயது முதிர்ந்த காலத்தில் தனக்கு மனநிம்மதியையும், பாதுகாப்பையும் தருமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மழை பெய்து சுவர் எல்லாம் சேதம் மற்றும் ஓடுகள் மாற்றவும் வேண்டிய சூழ்நிலை உள்ளதாகவும், அதற்குரிய சாரம் கட்டுவதற்கு கூட இடம் இல்லாமல் இருப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இது குறித்து சிவகங்கை குறைதீர்மன்றத்தில் தெரிவித்த பின் தலைவர் அவர்கள் கூறியதன் படி உதவி பொறியாளர்/நகர்/தேவகோட்டை மற்றும் உதவி செயற்பொறியாளர் நேரில் வந்து மின்மாற்றி அமைந்துள்ள இடத்தை பார்வையிட்டு சென்றதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 எனவே தன் வீட்டு காம்பவுண்டு சுவர் அருகே அமைக்கப் பெற்றுள்ள டிரான்ஸ்பார்மரை வேறு விசாலமான இடத்தில் வைக்கவும், அச்சமில்லாமல் வீட்டு

மாமரத்துக்களை பார்க்கவும் தகுந்த பாதுகாப்பு கொடுத்து உதவ வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 மேல்முறையீட்டாளர் திரு. RM. சொக்கலிங்கம் அவர்கள் தனது வீட்டு காம்பவுண்டு சுவர் அருகில் இருக்கும் மின்மாற்றியை வேறு ஏதாவது விசாலமான இடத்தில் அமைத்து தரவும் அச்சமில்லாமல் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், தகுந்த பாதுகாப்பு வழங்கவும் வழிவகை செய்து தருமாறு கோரியுள்ளார். மேல்முறையீட்டாளரின் வீடு உள்ள சம்பந்தர் தெருவானது பொதுமக்கள் அதிகமாக வசிக்கும் சிறிய தெருவாகும் எனவும், ஏற்கனவே பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சம்பந்தர் தெருவின் தார் சாலைக்கு அருகில் 100KVA/22KV/433V திறன் கொண்ட மின்மாற்றி நிறுவப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருவதாகவும், இந்த மின்மாற்றியின் மூலம் சம்பந்தர் தெரு, ஞானநந்தகிரி நகர் முதல் தெரு, குளக்கால் தெரு, வார சந்தைக்கு பின்புறம் உள்ள குடியிருப்பு வீடுகள் ஆகிய பகுதிகளுக்கு சுமார் 210 மின் இணைப்புகளுக்கு மின் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மின்மாற்றி இருக்கும் இடத்தில் மனுதாரரின் உயரமான காம்பவுண்டு சுவருடன் கூடிய வீட்டின் வடக்கு பகுதி உள்ளதாகவும், மின்மாற்றி இருக்கும் இடத்தில் மனுதாரரின் வீட்டு ஜன்னல், கதவு உள்ளிட்ட திறந்த பகுதி ஏதும் இல்லாமல், காம்பவுண்ட் நுழைவுக்கதவின் வழியே செல்வதற்கு மின்மாற்றி இடையூறாக இல்லாமலும், வீடு மின்மாற்றியுடன் இடையூறு இல்லாமல் பாதுகாப்பாக உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் சிவகங்கையில் கடந்த 18.09.2021 அன்று நடைபெற்ற குறைதீர்க்கும் மன்றத்தில் மின்மாற்றி அமைக்க வேறு இடம் தேர்வு செய்வதோ, அதற்கான செலவுகளை தன்னால் செலுத்தவோ இயலாது என்றும், மின்வாரிய செலவிலே இடம் மாற்றி அமைத்துக் கொள்ளுமாறு மனுதாரரால் கேட்டுக்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 குறைதீர்க்கும் மன்ற உத்தரவின்படி உதவி மின்பொறியாளர்/ நகர்/ தேவக்கோட்டை, உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ தேவக்கோட்டை அவர்கள் மனுதாரருடன் மின்மாற்றி இடம் மாற்றி அமைப்பது குறித்து களஆய்வு செய்து நேரடியாக மனுதாரரிடம் கேட்டபோது தன்னால் செலவு தொகையினை செலுத்த இயலாது எனவும், எதிர்மனுதாரர்களே இடத்தை தேர்வு செய்து மின்மாற்றியினை மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளரால் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 தமிழ்நாடு மின்வாரிய விதிமுறைகளின்படி DCW திட்டத்தின் கீழ் உரிய விண்ணப்பம் செய்து அதற்கான மதிப்பீட்டு அனுமதி கட்டணம் செலுத்தி மாற்றி அமைக்கலாம் எனவும், மன்ற உத்தரவில் இது குறித்த விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு கடித நகலும் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனது வீட்டு காம்பவுண்டு மிக அருகில் உள்ள மின் மாற்றியிலிருந்து அடிக்கடி தீப்பொறி வருவதாகவும், வீடு பராமரிப்பு செய்ய இடைஞ்சலாக இருப்பதாகவும், தனது மனைவியுடன் வயதான காலத்தில் வசித்து வரும் தங்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு மின்மாற்றியை இடம் மாற்றி அமைக்குமாறு கோரியுள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர் வீட்டு காம்பவுண்டுக்கு வெளிப்புறம் தார்சாலைக்கு அருகில் 22KV/33KV, 100 KVA மின்மாற்றி நீண்ட காலமாக பயன்பாட்டில் இருந்து வருவதாகவும், மின்மாற்றி உள்ள இடத்தில் மேல்முறையீட்டாளரின் வீட்டு ஜன்னல், கதவு உள்ளிட்ட திறந்த பகுதி ஏதும் இல்லையெனவும், DCW திட்டத்தின் கீழ் உரிய விண்ணப்பம் சமர்ப்பித்து அதற்கான மதிப்பீட்டு கட்டணம் செலுத்தும்பட்சத்தில் மின்மாற்றியை இடம் மாற்றி நிறுவப்படுமென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 தனது வீட்டு காம்பவுண்டுக்கு அருகில் உள்ள மின்மாற்றி மற்றும் கேபிள் போன்ற மின் உபகரணங்களிலிருந்து அடிக்கடி தீப்பொறி உண்டாவதால் பாதுகாப்பு குறைபாடு உள்ளதால் மின்மாற்றியை மாற்று இடத்தில் எதிர்மனுதாரர் செலவில் அமைக்குமாறு மேல்முறையீட்டாளர் கோருகிறார். மின்மாற்றி 2014–இல் நிறுவப்பட்டு ஏழு வருட காலமாக பயன்பாட்டில் இருந்து வருவதாகவும், மின்மாற்றி உள்ள இடத்திற்கு அருகில் வீட்டு ஜன்னல், கதவு மற்றும் திறந்த பகுதி ஏதுமில்லையெனவும், காம்பவுண்டு சுவர் உயரமாக உள்ளதாகவும், வீட்டின் சுவர் மற்றும் பிரதான கதவு (main door & wall) காம்பவுண்டு சுவரிலிருந்து சுமார் 15 அடி இடைவெளிக்கு பிறகு அமைந்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக நேரில் மேல்முறையீட்டாளருடன் இணைந்து கள ஆய்வு செய்து வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வரைபடத்தை ஆராயும்போது, கீழ்க்கண்ட தகவல்கள் அறியமுடிகிறது.

1. மின்மாற்றியின் கம்பத்திலிருந்து காம்பவுண்டு கதவு சுமார் 15 அடிக்கும் மேலான தூரத்தில் உள்ளது.
2. மின்மாற்றியின் H.V பகுதி பொதுப் பாதையின் பக்கமாகவும், L.V Bus bar பகுதி காம்பவுண்டு பக்கமாக காம்பவுண்டிலிருந்து சுமார் 3.5 அடி தூரத்தில் உள்ளதாகவும் அறிய முடிகிறது.
3. L.V Bus bar–லிருந்து சுமார் 30 அடி தூரம் இடைவெளிக்கு பிறகு வீட்டின் பிரதான சுவர் மற்றும் பிரதான கதவு அமைந்துள்ளது. (Main door and main wall of the house)
4. பிரதான கதவு மற்றும் வீட்டின் பிரதான சுவர் காம்பவுண்டு சுவரிலிருந்து சுமார் 28 அடி தள்ளி அமைந்துள்ளது.

மேற்கண்ட தகவல்களை ஆராயும்போது, போதுமான இடைவெளியுடன் பொதுப்பாதையில் மின்மாற்றி அமைக்கப்பட்டுள்ளது அறிய முடிகிறது. மேலும், 2014–இல் மின்மாற்றி நிறுவப்பட்டு ஏழு வருடங்கள் பயன்பாட்டில் உள்ளது. மின்மாற்றி, மின்பாதை மற்றும் மின்கம்பங்கள் ஆகியவற்றை இடம் மாற்றி அமைக்கும் நேர்வில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றி மின் வழங்கல் விதி 5(6)–ஐ ஆராய விரும்புகிறேன். மேற்கண்ட விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"5(6) Service / Line, structure and equipments shifting charge:***

*1) The cost of shifting service / line shall be borne by the consumer. The consumer shall pay the estimated cost of shifting in advance in full. The shifting work will be taken up only after the payment is made."*

மேற்கண்ட விதியின்படி, மின்பாதை, மின்கம்பம் மற்றும் மின் உபகரணங்களை இடமாற்றம் செய்வதற்கு தேவையான மதிப்பீட்டுத் தொகையை மேல்முறையீட்டாளர் ஏற்க வேண்டுமெனவும், அவ்வாறு அறிவிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை இடமாற்றம் செய்யும் வேலையை ஆரம்பிக்கும் முன்பே மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டுமெனவும் அறியமுடிகிறது. எனவே, DCW திட்டத்தின் கீழ் உரிய விண்ணப்பம் சமர்ப்பித்து அதற்கான மதிப்பீட்டு தொகையை செலுத்தும் பட்சத்தில் மின்மாற்றியை இடம் மாற்றி நிறுவப்படுமென்கிற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதாக கருதுகிறேன்.

## 8.0 <u>குறிப்பாய்வு:</u>

8.1 மின்மாற்றியில் ஆயில் கசிவும், மின் உபகரணங்களில் தீப்பொறியும் ஏற்படுவதாகவும், அதனால் பாதுகாப்பு குறைவு நிலை உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மின்மாற்றி மற்றும் மின்உபகரணங்களில் பராமரிப்பு குறைபாடு உள்ளதாக அறிய முடிகிறது. ஆகையால் மின்மாற்றியில் மின்பளு அனுமதிக்கப்பட்ட மின்பளுவை மிகாமல் இருப்பதை உறுதி செய்தும், குறிப்பிட்ட கால இடைவெளியில் சரியான பராமரிப்பு செய்தும், மேல்முறையீட்டாளர் மற்றும் பொதுப் பாதையை பயன்படுத்தும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வது எதிர்மனுதாரரின் கடமையாகும்.

## 9.0 <u>முடிவுரை:</u>

9.1 பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி எதிர்மனுதாரர் செலவில் மின்மாற்றியை இடமாற்றம் செய்ய வேண்டுமென்கிற மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

9.2 மின்மாற்றி மற்றும் மின்உபகரணங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் முறையான பராமரிப்பு செய்து மேல்முறையீட்டாளர் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு எதிர்மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

9.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 89/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்:

1. திரு. RM. சொக்கலிங்கம்,
5, சம்பந்தர் தெரு,
தேவகோட்டை – 630 302.

2. செயற்பொறியாளர்/பகிர்மானம் / காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், கலானிவாசல்,
காரைக்குடி – 630702.

3. உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம் /தேவகோட்டை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தேவகோட்டை – 630302.

4. உதவி பொறியாளர்/ நகர் / தேவகோட்டை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தேவகோட்டை – 630302.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவகங்கை கலெக்டர் அலுவலகம்,
சிவகங்கை – 630 562.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.